**தமிழ்க் கல்வி நிலையம், ஹோம்புஷ்**

**Tamil Study Centre, Homebush Inc.**

**Postal Address: P O Box 4019, Homebush NSW 2140**

www.tsch.org.au info@tsch.org.au

# ஆண்டிறுதிப் பரீட்சை 2020

ஆண்டு: 4 விசேட வகுப்பு திகதி: 21/11/2020

நேரம்: 2 மணித்தியாலங்கள்

ஆசிரியர்: திருமதி உஷா ஜவாகர்

மாணவர் பெயர்: ____________________________________________

| **வினாக்கள்** | **வினா புள்ளி** | **பெற்ற புள்ளி** |
| --- | --- | --- |
| வினா 1 | 30 | |
| வினா 2 | 20 | |
| வினா 3 | 25 | |
| வினா 4 | 25 | |
| **மொத்தப் புள்ளிகள்** | **100** | |

# பூனையும் நரியும்

பூனையும் நரியும் சந்தித்தன. பல விஷயங்களைப் பற்றி பேசின. கடைசியில் திடீரென்று ஆபத்து வந்தால் எப்படித் தப்புவது என்பதைப் பற்றி பேச்சு வந்தது.

**நரி**: "எப்படிப்பட்ட ஆபத்தாய் இருந்தாலும் சரி, எனக்குக் கவலையே கிடையாது. ஆபத்திலிருந்து தப்புவதற்கு எனக்கு நூற்றுக்கணக்கான தந்திரங்கள் தெரியும்" என்றது.

**பூனை**: "எனக்கு நூற்றுக்கணக்கான தந்திரங்கள் தெரியாது. ஒரே ஒரு தந்திரந்தான் தெரியும். அது பலிக்காவிட்டால் என்கதி அதோகதிதான்" என்றது.

**நரி**: "பாவம், உன்னைப் பார்த்தால் எனக்கு பரிதாபமாக இருக்கிறது. நான்கூட உனக்கு ஒன்று இரண்டு தந்திரங்களைச் சொல்லிக் கொடுக்கிறேன்" என்றது.

இச்சமயத்தில் இரண்டு வேட்டை நாய்கள் வந்து கொண்டிருந்தன. பூனை தனக்குத் தெரிந்த ஒரே உபாயத்தை கைக்கொண்டு பக்கத்திலுள்ள மரத்தில் ஏறி சௌகரியமாக உட்கார்ந்து கொண்டது. நரி தனக்குத் தெரிந்த உபாயங்களை ஒன்று ஒன்றாய் கைக் கொண்டது. இதற்குள் வேட்டை நாய்கள் வந்து நரியின் மீது பாய்ந்து நரியைக் கொண்டு விட்டன.

**நீதி**: ஒன்றாய் இருந்தாலும் அதை நன்றாய்ச் செய்தால் ஆபத்திலிருந்து தப்பலாம்.





1. எந்த இரண்டு மிருகங்கள் சந்தித்தன?

2. நரி என்ன கூறியது?

3. பூனை என்ன கூறியது?

4. ஆபத்து என்ற சொல்லின் ஆங்கிலப் பதம் என்ன?

5. எந்த மிருகம் தப்பித்தது?

6. இந்தக் கதையின் நீதி என்ன?

(6 x 5 = 30 புள்ளிகள்)

- BLANK PAGE -

| வினா இல | 2 | புள்ளிகள் | 20 | பக்கம் | 5 |
|---|---|---|---|---|---|

**பின்வரும் சொற்களில் உள்ள எழுத்துக்களைப் பயன்படுத்தி வேறு சொற்களை உண்டாக்குக.**

1. நகரம் ____________________

2. கடைக்கண் ____________________

3. காணவில்லையா ____________________

4. பலகாரம் ____________________

5. சிலகாலம் ____________________

(5 x 4 = 20 புள்ளிகள்)

| வினா இல | 3 | புள்ளிகள் | 25 | பக்கம் | 5 |
|---|---|---|---|---|---|

**பின்வருவனவற்றிக்கு ஒத்த கருத்துள்ள சொல் தருக.**

1. சிந்தித்தான் : ____________________

2. சுவையானது : ____________________

3. கவர்ந்தது : ____________________

4. கவலை : ____________________

5. காலம் : ____________________

(5 x 5 = 25 புள்ளிகள்)

- BLANK PAGE -

| வினா இல | 4 | புள்ளிகள் | 25 | பக்கம் | 7 |
|---|---|---|---|---|---|

**பின்வரும் சொற்களைக் கொண்டு வசனம் அமைக்க.**

1. பண்ணை

___

___

___

2. பாடசாலை

___

___

___

3. துறைமுகம்

___

___

___

4. விமானநிலையம்

___

___

___

5. தொழிற்சாலை

___

___

___

(5 x 5 = 25 புள்ளிகள்)